# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, ஏப்பிறல் மாதம் 28 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 13.75** **தபாற் செலவு : ரூபா 7.50**

## **2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்**

[*2006 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச. வ. ஓ. 14/2003*

**தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கும் குறித்தசில புதிய தவறுகளுக்கு ஏற்பாடுசெய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :—*

**1.** *இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* *சுருக்கப்பெயர்.*

**2.** *(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் (இது இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—* *19 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) *அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஏற்பாடுகளுக்கு முரணான" என்னும் சொற்களுக்குப் பதிலாக —*

*"ஏற்பாடுகளுக்கு முரணாக —*

(அ) *முழுமையாக அல்லது பகுதியளவில் இலங்கையினுள் ;*

(ஆ) *இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளுக்குள் அல்லது வான் வெளிக்குள் ;*

(இ) *இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கப்பல் அல்லது வானூர்தி அத்தகைய செயல் அல்லது தவிர்வு புரியப்பட்ட நேரத்தில் எங்கிருந்தாலும் அக்கப்பலில் அல்லது வானூர்தியில் ;*

(ஈ) *இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஓர் இலங்கைத் தூதராலயத்தின் வளவுகளுக்குள் அல்லது அத்தகைய தூதராலயத் தலைவரின், தூதாண்மை முகவரின் அல்லது அத்தகைய தூதராலயத்தின் வேறு எவரேனும் உறுப்பினரின் வதிவிட வளவுகளுக்குள் ; அல்லது*

(உ) இலங்கை அரசாங்கத்தின் அல்லது இலங்கையில் தாபிக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக்குழுவின் சார்பில் அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பாட்சிக் கொள்ளப்பட்டவையும் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளவையுமான எவையேனும் வளவுகளுக்குள் புரியப்படும்"

என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) இலங்கை நாட்டினத்தவர் ஒருவர் இச்சட்டக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக இலங்கைக்கு வெளியே புரியப்படும் எச்செயல் அல்லது தவிர்வுக்கு அவர் குற்றவாளியாதல் வேண்டுமோ அச்செயல் அல்லது தவிர்வு ஒவ்வொன்றிற்கும், அத்தகைய செயல் அல்லது தவிர்வு தொடர்பில் வெளிநாட்டு அரசொன்றினால் அத்தகைய அரசில் அவரது தூ தாண்மை அந்தஸ்து காரணமாக அவருக்கு வழங்கப்பட்ட தூ தாண்மை விடுபாட்டுரிமையை அத்தகைய நாட்டினத்தவர் துய்ப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி, இச்சட்டக்கோவையின்கீழ் அத்துடன் வேறெதன்கீழுமன்றி தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.";அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும் :—

"சட்டக்கோவையின் கீழான தவறுகளுக்கான பொறுப்பு.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 286ஆ, 286இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 286அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அத்தகைய சட்டவாக்கத்தின் 286ஆ மற்றும் 286இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*"கணனிமூலம் சேவைவழங்கும் ஆளுக்கு ஒரு பிள்ளையின் பாலியல் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான கடமை.*

286ஆ (1) கணனியொன்றின் வாயிலாக சேவையொன்றை வழங்கும் ஆளொருவர் அத்தகைய கணனி வசதியானது பிள்ளையொன்றின் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான தவறொன்று அமையும் செயலொன்றைப் புரிவதற்குப் பயன் படுத்தப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லா நடபடிகளையும் எடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் அத்தகைய கணனி வசதியானது பிள்ளையொன்றின் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான தவறொன்றாக அமையும் செயலொன்றைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என அறிந்திருப்பவரான (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர், உடனடியாக அந்நிகழ்வை அருகிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள அலுவலருக்கு அறிவித்தலும் அத்தகைய செயல் தொடர்பில் தம்மகத்தே இருக்கக்கூடியவாறான அத்தகைய தகவலையும் குற்றஞ்சார்த்தப்பட்ட தவறாளரின் ஆளடையாளத்தையும் கொடுத்தலும் வேண்டும் ;

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் "பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்.

*வளவுகள் பிள்ளைத் துஷ்பிரயோகத் திற்குப் பயன் படுத்தப்படு வதைப் பற்றி அறிவிப்பதற் கான கடமை.*

286இ. (1) ஏதேனும் வளவு பிள்ளைத் துஷ்பிர யோகமாக அமைகின்ற செயலொன்றைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை அறிந்திருக்கின்றவரான அத்தகைய வளவுகளின் பொறுப்பை, பராமரிப்பை, கட்டுப்பாட்டை அல்லது ஆட்சியுடைமையைக் கொண்டுள்ள ஆளெவரும், அத்தகைய நிகழ்வுபற்றி அருகிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) பிள்ளையொன்றின் துஷ்பிரயோகமாக அமையும் செயலொன்றைப் புரிவதற்கு அத்தகைய வளவு பயன்படுத்தப்படுகின்றது என்ற நிகழ்வைப் பற்றி அருகிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள அலுவலருக்கு அறிவிக்கத் தவறுகின்றவரான (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் "பிள்ளை" என்பது பதினெட்டு வயதுக்குக் குறைவான ஆள் என்று பொருள்படும்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 308அ என்னும் பிரிவினைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 308அ என்னும் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப்பின்னர் பின்வரும் விளக்கத்தினைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :—

"**விளக்கம் :** "ஊறுகள்" என்பது உளவியல் அல்லது மனக்கிலேசத்தை உள்ளடக்கும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 345 ஆம் பிரிவினை திருத்துதல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 345 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) பின்வரும் விளக்கத்தை அப்பிரிவுக்கான விளக்கம் 2க்குப் பதிலாக இடுவதன் மூலமும் :—

"**விளக்கம்** 2 : இப்பிரிவின் நோக்கங்களுக்காக தாக்குதல் என்பது, 363 ஆம் பிரிவின்கீழ் கற்பழிப்பு அல்லது 365ஆ என்னும் பிரிவின்கீழ் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் எனக் கொள்ளத் தக்கதல்லாத செயல் எதனையும் உள்ளடக்கலாம்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் விளக்கம் 2 இனை உடனடுத்துப் பின்வரும் விளக்கத்தைச் சேர்ப்பதன்மூலமும் :—

"**விளக்கம்** 3 : "ஊறுகள்" என்பது உளவியல் அல்லது மனக்கிலேசத்தை உள்ளடக்கும்.".

*"ஆட்கடத்தலும் கடத்திச் செல்லும்" என்னும் தலையங்கத்தை மாற்றீடு செய்தல்.*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 350 ஆம் பிரிவுக்கு உடன் மேலே காணப்படும் தலையங்கம் இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய தலையங்கம் இடப்படுகின்றது :—

"ஆட்கவர்தல், ஆட்கடத்தல் அடிமைத்துவம் முதலியன"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 358அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 358 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 358அ என்றாற் போன்று பயனுறுதலும் வேண்டும் :—

*"தனிசுத்தளை, பிணிப்பு, வலோற்கார அல்லது கட்டாய ஊழியம், அடிமைத்துவம் அத்துடன் ஆயுதந்தாங்கிய போராட்டத்திற்காக பிள்ளைகளின் ஆட்திரட்டல்.*

358அ. (1) (அ) எவரேனும் ஆளை தனிசுத்தளை அல்லது பிணிப்புக்கு உட்படுத்துகின்ற அல்லது உட்படுத்துவிக்கின்ற ;

(ஆ) எவரேனும் ஆளை வலோற்கார அல்லது கட்டாய ஊழியத்துக்குட்படுத்துகின்ற அல்லது உட்படுத்துவிக்கின்ற ;

(இ) எவரேனும் ஆளை அடிமைத்து வத்துக்கு உட்படுத்துகின்ற அல்லது உட்படுத்துவிக்கின்ற ; அல்லது

(ஈ) ஒரு பிள்ளையை ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் ஈடுபடுத்துகின்ற அல்லது அதில் பயன்படுத்தப் படுவதற்கென ஆட்திரட்டுகின்ற,

ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளி யாகும் ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கும் குற்றப்பணமொன்றுக்கும் ஆளா தல் வேண்டும். (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் ஒரு பிள்ளை தொடர்பில் அல்லது (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் தவறு புரியப்படுமிடத்து, முப்பது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்ட னைக்கும் அத்துடன் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவில் —

"தனிசுத்தளை" என்பது, தனிசொன்றுக்குப் பிணைப்பொறுப்பாக கடனாளியொரு வரின் அல்லது அவரது கட்டுப்பாட் டின் கீழுள்ள ஆளொருவரின் தனிப் பட்ட சேவைகளின், நியாயமாகக் கணிப் பீடு செய்யப்பட்டதான பெறுமதி தனிசை ஈடுசெய்து தீர்க்காதும் அத்து டன் அச்சேவைகளின் காலளவும் தன் மையும் வரைவிலக்கணப்படுத்தல் படாதும் இருப்பின், அச்சேவைகள் தனிசுக்கான பிணைப்பொறுப்பாக கடனாளியால் உறுதியளிக்கப்பட்டதி லிருந்து எழும் கடனாளி யொருவரின் நிலைவரம் அல்லது நிலைமை எனப் பொருள்படும்

"வலோத்கார அல்லது கட்டாய ஊழியம்" என்பது —

(அ) முற்றிலும் இராணுவ இயல்பினதான வேலையை அல்லது சேவையை கட்டாய இராணுவ சேவைத் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் பயனைக்கொண்டு பெறப்படும் ஏதேனும் வேலையை அல்லது சேவையை ;

(ஆ) முற்றிலும் தன்னாட்சிகொண்ட நாட்டின் பிரசைகளின் சாதாரண குடியியற் கடப்பாடுகளின் பாகமாக அமையும் ஏதேனும் வேலையை அல்லது சேவையை ;

(இ) வேலை அல்லது சேவை பகிரங்க அதிகாரசபையொன்றின் மேற்பார்வையின்கீழும் கட்டுப்பாட்டின் கீழும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட ஆள் தனியாட்களுக்கு அல்லது தனியார் கம்பனிகளுக்கு அல்லது கழகங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டவராக அல்லது அவர்களின் அல்லது அவற்றின் பயன்பாட்டிற்கு விடப்பட்டவராக இருத்தலும் ஆகாது என்பதற்கிசைய, நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட தண்டனையொன்றாக எவரேனும் ஆளிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் வேலையை அல்லது சேவையை ;

(ஈ) அவசரகால நிலைமையின் விடயங்களில், அதாவது போர் அல்லது தீ, வெள்ளம், பஞ்சம், பூகம்பம், கொடிய விலங்குத் தொற்று நோய்கள், விலங்கிணத்தின், பூச்சிகளின் அல்லது காய்கறிப் பீடைகளின் முற்றுகைப்பேரிடர் அல்லது அச்சுறுத்தும் பேரிடர் போன்ற விடயத்திலும் அத்துடன் பொதுவில் முழுக் குடிசனத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் உயிர்வாழ் நிலைக்கு அல்லது நலனுக்கு ஆபத்து விளைவிக்கும் ஏதேனும் சூழ்நிலையில் பெறப்படும் ஏதேனும் வேலையை அல்லது சேவையை ;

(உ) *சிறிய சேவையை சமுதாயத்தின் உறுப்பினர்கள் அல்லது அவர்களது நேரடிப் பிரதிநிதிகள் அத்தகைய சேவைகளுக்கான தேவை தொடர்பாக கலந்தாலோசிக்கப்படுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதற்கிசைய, ஒரு சமுதாயத்தின் நேரடி நலனுக்கு என சொல்லப்பட்ட சமுதாயத்தின் உறுப்பினர்களால் புரியப்படுவதும் அதன்மூலம் சமுதாய உறுப்பினர்கள் மீது சுமத்தப்பட்ட சாதாரண குடியியல் கடப்பாடுகளாகக் கருதப்படுபவையுமான ஒரு வகையினவான அத்தகைய சிறிய சேவையை,*

*தவிர ஏதேனும் தண்டத்தின் அச்சுறுத்தலின்கீழ் ஆளொருவரிடமிருந்து பெறப்பட்டதும் அதனைச் செய்வதற்கு அத்தகைய ஆள் தன்னிச்சையாக முன்வராததுமான ஏதேனும் வேலை அல்லது சேவை என்று பொருள்படும் ;*

*"பிணிப்பு" என்பது, வேறொர் ஆளுக்குரிய காணியில் வசிப்பதற்கும் ஊழியம் செய்வதற்கும் சன்மானத்திற்காயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி ஏதேனுமொரு நிர்ணயிக்கப்பட்ட சேவையை அத்தகைய வேறு ஆளுக்கு வழங்குவதற்கு சட்டத்தால், வழக்காறல் அல்லது உடன்படிக்கையால் பிணிக்கப்பட்டவரும் அவரது நிலைவரத்தை மாற்றுவதற்குச் சுதந்திரமில்லாதவருமான வாடகையாளர் ஒருவரின் நிலைமை அல்லது நிலைவரம் என்று பொருள்படும் ;*

*"அடிமைத்துவம்" என்பது, எந்த ஆளின்மீது சொந்தத்தின் உரிமைசார்ந்த தத்துவங்கள் எவையும் அல்லது அனைத்தும் பிரயோகிக்கப்படுகின்றனவோ அந்த ஆளொருவரின் நிலைவரம் அல்லது நிலைமை என்று பொருள்படும் ; அத்துடன்*

"பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 360 இ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 360இ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது –

"விலைப்படுத்துதல்.

360இ. (1) எவ்வாள் –

(அ) பணத்திற்காக அல்லது வேறு ஏதேனும் பிரதிப்பயனுக்காக வேறோர் ஆளை வாங்குகின்றாரோ விற்பனை செய்கின்றாரோ அல்லது பண்டமாற்றுச் செய்கின்றாரோ அல்லது எவரேனும் ஆளை வாங்குவதற்கு, விற்பதற்கு அல்லது பண்டமாற்றுச் செய்வதற்குத் தூண்டுகின்றாரோ அல்லது எவரேனும் ஆளை வாங்குவதனை, விற்பதனை அல்லது பண்டமாற்றுச் செய்வதனை ஊக்குவிப்பதற்கு, வசதியளிப்பதற்கு அல்லது தூண்டுவதற்கு எதனையும் செய்கின்றாரோ ;

(ஆ) எவரேனும் ஆளை வலோத்காரமான அல்லது கட்டாய ஊழியத்தை அல்லது சேவைகளைப் பெறுகின்ற அல்லது அடிமைத்துவத்தின், சேவகத்தின், உறுப்புகளை அப்புறப்படுத்துதலின், விபச்சாரத்தின் அல்லது வேறு விதங்களிலான பாலியற் பயன்நுகர்வின் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ்த் தவறொன்றாக அமைகின்ற வேறேதேனும் செயலின் நோக்கத்திற்காக ஆட்திரட்டுகின்றாரோ, ஏற்றிச்செல்லுகின்றாரோ, இடமாற்றுகின்றாரோ, அடைக்கலமளிக்கின்றாரோ அல்லது ஏற்றுக்கொள்ளுகின்றாரோ அல்லது அச்சுறுத்தலை, வலுக்கட்டாயத்தை, மோசடியை, ஏமாற்றுதலை அல்லது தூண்டுதலைப் பயன்படுத்தி அல்லது மற்றவரின் பலிக்குட்படுத்தும் தன்மையைப் பயன்நுகர்வதன்மூலம் வேறேனும் செயலைச் செய்கின்றாரோ ; அல்லது

(இ) பிள்ளையொன்றை அத்தகைய பிள்ளையின் சம்மதத்துடனாயினுஞ்சரி சம்மதமில்லாமலாயினுஞ்சரி, வலோத்காரமான அல்லது கட்டாய ஊழியத்தை அல்லது சேவைகளைப் பெறுகின்ற அல்லது அடிமைத்துவத்தின், சேவகத்தின் அல்லது உறுப்புகளை அப்புறப்படுத்துதலின், விபச்சாரத்தின் அல்லது வேறு விதங்களிலான பாலியற் பயநுகர்வின் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ்த் தவறொன்றாக அமைகின்ற வேறேதேனும் செயலின் நோக்கத்திற்காக ஆட்திரட்டுகின்றாரோ, ஏற்றிச்செல்லுகின்றாரோ, இடமாற்றுகின்றாரோ, அடைக்கலமளிக்கின்றாரோ அல்லது ஏற்றுக்கொள்ளுகின்றாரோ அல்லது வேறு ஏதேனும் செயலைச் செய்கின்றாரோ,

அவ்வாள் விலைப்படுத்துதல் என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) விலைப்படுத்துதல் என்னும் தவறுக்குக் குற்றவாளியாகும் ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகைமறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், குற்றப்பணத்துடனும் தண்டிக்கப் படலாம். அத்துடன் அத்தகைய தவறு ஒரு பிள்ளை தொடர்பில் புரியப்படுமிடத்து, மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படலாம்.

(3) இப்பிரிவில் —

"பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும் ;

"வலோத்கார அல்லது கட்டாய ஊழியம்" என்பது, 358அ என்னும் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"அடிமைத்துவம்" எனபது, 358அ என்னும் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் ; அத்துடன்

"மற்றவரின் பலிக்குட்படுத்தும் தன்மையைப் பயன் நுகர்தல்" என்பது, ஆளொருவர் வேறொருவரை அத்தகைய வேறு ஆளின் பொருளாதார, கலாச்சார அல்லது வேறு சூழ்நிலைகளைச் சாதகமாக்கிக்கொள்வதன்மூலம் ஏதேனும் செயலுக்கு அடிபணியுமாறு நிர்ப்பந்தித்தல் என்று பொருள்படும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 360ஈ மற்றும் 360உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 360இ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 360ஈ மற்றும் 360உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*"மகவேற்புத் தொடர்பிலான தவறுகள்.*

360ஈ. எவரேனும் ஆளை மகவேற்புக்காக வைத்திருக்கும் நோக்கத்திற்கென —

(i) பிள்ளையொன்று அதன் பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் சம்மதமின்றி வெளிநாடொன்றுக்குப் பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்கின்ற அல்லது துணைபுரிகின்ற ;

(ii) கர்ப்பம் தரித்திருக்கும் பெண் ஒருவரிடமிருந்து அத்தகைய பெண்ணின் இன்னமும் பிறக்காத பிள்ளையை பணத்துக்காக அல்லது வேறு பிரதிபயனுக்காக மகவேற்பு செய்வதற்காக அவரது சம்மதத்தை எழுத்திலாயினுஞ்சரி வாய் மூலமாயினுஞ்சரி பெறுகின்ற ;

(iii) குழந்தைகள் பெறுவதற்கென ஒரு பெண்ணை அல்லது ஆண், பெண் சோடியொன்றை அமர்த்துகின்ற ;

(iv) பிறப்புகள் பதிவுடன் தொடர்புபட்ட ஆள் ஒருவராக இருந்துகொண்டு பிறப்புகளைப் பதிவுசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் இடாப்பை ஏதேனும் அத்தகைய இடாப்பில் அடங்கியுள்ள ஏதேனும் பிறப் புப் பதிவை தெரிந்துகொண்டே பொய்ப் புனைதலை அனுமதிக்கின்ற ;

(v) பணத்திற்காக அல்லது வேறு பிரதி பயனுக்காக ஆசுப்பத்திரிகளிலிருந்து, பெண்கள் புகலிடங்களிலிருந்து, சிகிச்சை நிலையங்களிலிருந்து, வளர்ப்பு நிலை யங்களிலிருந்து, பகற்கவனிப்பு நிலையங் களிலிருந்து அல்லது வேறு பிள்ளைப் பராமரிப்பு நிறுவனங்களிலிருந்து அல் லது நலம் பேணல் நிலை யங்களிலிருந்து பிள்ளைகளைப் பெறுவதில் ஈடுபடுகின்ற அல்லது தாயை அல்லது வேறு எவரேனும் ஆளை மிரட்டுவதன்மூலம் அத்தகைய ஏதேனும் நிறுவனத்திலிருந்து அல்லது நிலையத்திலிருந்து மகவேற்புக் காக பிள்ளையொன்றைப் பெறுகின்ற ; அல்லது

(vi) தாயை ஆள்மாறாட்டம் செய்கின்ற அல் லது அத்தகைய ஆள்மாறாட்டத்திற்கு உதவி செய்கின்ற,

எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படு வதன் மேல் இருபது ஆண்டுகளை விஞ்சாத வொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற் றண்டனையால் அல்லது ஒரு குற்றப்பணத்தால் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப் பணம் ஆகிய இரண்டாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் "பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்.

*பிள்ளையொன்றைப் பரிந்து கேட்டல்.*

360உ. (1) இலங்கைக்குள் ஆயினுஞ்சரி, இலங்கைக்கு வெளியிலிருந்தாயினுஞ்சரி எத்தன்மையதுமான வழிமுறையினால் –

(அ) பதினெட்டு வயதுக்குக் குறைவான ஆளொருவரை ; அல்லது

(ஆ) எவரேனும் ஆள் பதினெட்டு வயதுக்குக் குறைவானவர் என நம்பி அத்தகைய ஆளை,

பிள்ளையொன்றின் பாலியல் துஷ்பிரயோகத்தின் நோக்கத்துக்காக பரிந்துகேட்கின்ற எவரும், பிள்ளையொன்றைப் பரிந்து கேட்கும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 364 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 364 ஆம் பிரிவு, அப்பிரிவின் விளக்கம் 3ஐ உடனடுத்துப் பின்வரும் விளக்கத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"**விளக்கம் 4** : "ஊறுகள்" என்பது, உளவியல் அல்லது மனக்கிலேசத்தை உள்ளடக்கும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 365 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 365 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது –

(1) அப்பிரிவில் "விளக்கம்" என்னும் சொல்லுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் –

"**விளக்கம் 1** –" ;

(2) அப்பிரிவின் விளக்கம் (1) ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய விளக்கத்தைச் சேர்ப்பதன் மூலமும் :–

"**விளக்கம் 2** : "ஊறுகள்" என்பது, உளவியல் அல்லது மனக் கிலேசத்தை உள்ளடக்கும் .".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 365அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 365அ என்னும் பிரிவு அப் பிரிவின் முடிவை உடனடுத்துப் பின்வரும் விளக்கத்தைச் சேர்ப் பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"**விளக்கம்** : "ஊறுகள்" என்பது, உளவியல் அல்லது மனக்கிலேசத்தை உள்ளடக்கும் .".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 365ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 365ஆ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஏழு ஆண்டுகளுக்குக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து ஆண்டுகளுக்குக்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "பத்து ஆண்டுகளுக்குக்" என்னும் சொற்களுக்குப் பதி லாக, "ஏழு ஆண்டுகளுக்குக்" என்னும் சொற் களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் முடிவை உடனடுத் துப் பின்வரும் விளக்கத்தைச் சேர்ப்பதன் மூலமும் :–

"**விளக்கம்** : "ஊறுகள்" என்பது, உளவியல் அல்லது மனக்கிலேசத்தை உள்ளடக்கும் .".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்